# இலங்கை அரசாட்சி கெசெற் பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,838 — 1931 ம் ஹூ பங்குனிமீ 27 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV. நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் விளம்பரம்.

E 82/26

"1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியா பரிபாலன கட்டளைச் சட்டம்."

1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியா பரிபாலன கட்டளைச் சட்டத்தின் 25 ம் பிரிவின்படி கண்டி நகர பிரிவுக்கென வித்தியா பரிபாலன சபையால் செய்யப்பட்டு வித்தியா சங்கத்தின் அங்கீகாரம் பெற்று அதிகார மந்திரசபையோடு கூடிய தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட உபவிதி.

உத்தமனுர் கட்டளைப்படி,

எவ். ஜீ. திரல்,
அக்ற்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1931 ம் ஹூ மார்ச்சுமீ 24 ந் திகதி.

உபவிதி.

1926 ம் ஆண்டு செப்ற்றெம்பர்மீ 17 ந் தேதியைக்கொண்ட 7,546 ம் இலக்க கசெற் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1926 ம் ஆண்டு செப்ற்றெம்பர்மீ 6 ந் தேதியைக்கொண்ட உபவிதிகளின் II ம் அதிகாரத்திலுள்ள 7 ம் உபவிதி நிவாரணமாக்கப்படுதல் வேண்டும்.

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1911 ம் ஹூ-த்து 10ம் கட்டளைச் சட்டத்தின் 3ம் பிரிவினுல் திருத்தப்பட்ட பிரகாரம் 1876ம் ஆண்டின் 3 ம் கட்டளைச் சட்டத்தின் 6ம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ்மந்திராலோசனைச் சபையோடுகூடிய அரசாங்க பரிபாலனஞ்செய்யும் உத்தியோகஸ்தர் மட்டக்குளி, சென்ற் மேறீஸ் லேனில் மழைத்தண்ணீர் ஓடும் கான் கட்டுதலாகிய ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி எனக்குக் கற்பனை செய்திருப்பதினுல் :

பிரதமபடத்து இலக்கம் 20,089. மட்டக்குளி.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | சென்ற் மேறீஸ் லேன் 41A நம்பர் பேரால் வரிகொடுக்கும் காணியின் பகுதி | வெறுந்தரை .. | மிஸ்ஸ். ஜஸ்ரினு பெறிரு, மட்டக்குளி | 0 | 0 | 0·70 |
| 2 | சென்ற் மேறிஸ் லேன் 33ம் நம்பர் பேரால் வரிகொடுக்கும் காணியின் பகுதி | தோட்டம், 40 வருஷ 6 தென்ன மரங்களும், 15 வருஷ 1 தென்னமரமும், ஒரு வருஷ 7 கமுக மரங்களும் உளது | கே. ஸ்ரீவன் டயஸ், ஜி. அஜிதா பீறிஸ், மட்டக்குளி | 0 | 0 | 7·73 |
| 3 | சென்ற் மேறீஸ் லேன் 1047/A 39(2) நம்பர் பேரால் வரிகொடுக்கும் காணியின் பகுதி | தோட்டம், 50 வருஷ 1 தென்னமரமும், 15 வருஷ 3 தென்னமரங்களும் உளது | ஜி. எம். பெர்னுண்டோ, மட்டக்குளி | 0 | 0 | 7·24 |
| 4 | ஷை .. | தோட்டம், 15 வருஷ 1 தென்னமரமும், 15 வருஷ ஒரு பனைமரமும், 10 வருஷ 1 கமுக மரமும் உளது | மிஸ்ஸ். ஜி. மேறி பெறிரு, மட்டக்குளி | 0 | 0 | 5·90 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 5 | சென்ற் மேரீஸ் லேன் 41F நம்பர் பேரால் வரிகொடுக்கும் காணியின் பகுதி | தோட்டம், 50 வருஷ 2 தென்னமரங்களும், 5 வருஷ 11 தென்னமரங்களும், 1 வருஷ 1 தென்னம்பிள்ளையும், 10 வருஷ 25 கமுகமரங்களும், 2 வருஷ ஒரு கமுகம்பிள்ளையும், 50 வருஷ ஒரு பிலாமரமும், 20 வருஷ ஒரு மாமரமும், 2 வருஷ ஒரு தோடை மரமும், 2 வருஷ ஒரு சூர்சுப்கண்டும் உளது | மிஸ்ஸ். டி. ஜூலியானு பெதிரு, டி. உவால்றர் பெதிரு, டி. செலஸ்ரினு பெதிரு, டி. இசாபெல் பெதிரு, டி. ஜோஜ் பெதிரு, டி. கதிறினு பெதிரு, டி. மார்ஸல் பெதிரு, டி. கிறிஸ்ரினு பெதிரு, டி. லூசியன் பெதிரு, டி. மாட்டின் பெதிரு, மட்டக்குளி | 0 0 8 |
| 6 | ஷை .. | வெறுந்தரை .. .. | ஷை .. | 0 0 6 |
| 7 | ஷை .. | தோட்டம், 25 வருஷ 1 தென்னமரமும், 5 வருஷ 1 சூர்சுப் மரமுமுளது | ஷை .. | 0 0 5·06 |
| 8 | ஷை .. | தோட்டம், 25 வருஷ 2 தென்னமரங்கள் உளது | ஷை .. | 0 0 5·63 |
| 9 | சென்ற் மேறிஸ் லேன் 37ம் நம்பர் பேரால் வரிகொடுக்கும் காணியின் பகுதி | தோட்டம், 50 வருஷ 7 தென்னமரங்கள் உளது | கெ. எஸ். டயஸ், ஜி. அஜிநா, பீறிஸ், மட்டக்குளி | 0 0 3·50 |
| | | | | 0 1 9·76 |

மேலே சொல்லப்பட்ட காணிகளை அரசாட்சியார் ஆட்சிஒப்புக்கொள்ள எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் இதனால் பிரசித்தப்படுத்துகிறேன்.

சொல்லப்பட்ட காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாறர் மூலமாய் 1931 ம் ஆண்டு ஏப்பிரல் மாசம் 29 ந் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு நகரசங்க கந்தோரில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளின் தன்மைக்கும், அவ்வுடந்தைகளுக்காக பணம் பெறுவதற்கு எவ்வித பாத்தியமுடையவர்களென்றும், உறுதிகளாலும், பதிவுகொப்பிகளாலும், சபாநாயகருக்கு அத்தாட்சிப்பண்ணிக் காட்டியும், சொல்லப்பட்ட காணிகளிலுள்ள உரித்துகளின் விபரத்தையும், அவ்வுரித்துக்களுக்காய்த் தாம் சாதிக்கும் பணத் தொகையையும் விபரங்களையும் சொல்லும்படி இதனால் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நகரசங்கக் கந்தோர்,
கொழும்பு, 1931 ௵ மார்ச்௴ 27 ந் திகதி.

எச். ஈ. நியுன்ஹம்,
நகரசங்க சபாநாயகரும், கொழும்பு நகராதிகாரியும்.

---

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் களனி ஆறு கடக்கும் இடத்தில் இரண்டு கோபுரம கட்டுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 20,197. குறிச்சி—பெற்றியகொட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | புங்கலவத்த .. | தென்னங்காணி, இரண்டு தென்னையுள்ளது | ஐ. ஏமானிஸ் அப்புகாமியின் நோனு | 0 0 3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ௵ சித்திரை மாசம் 30 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தேரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1931 ௵ பங்குனி௴ 24 ௳.

எச். பீ. கொவ்மன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நீர்கொழும்பு நகர சங்கத்துக்குரிய குப்பை தாக்குமிடம் பெருப்பித்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 20,205. குறிச்சி—குறன.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பொல்லகவத்த அல்லது சீயம்பலககவத்த அல்லது அம்பககவத்த இறைவரி இல. 170 | தென்னங்காணி, 81 தென்னையும், 4 கோகொம்போவும், 1 பலாவும், 1 தேலும், 3 நறனும், 2 எலுமிச்சையும், ஒரு ஓலைக்கொட்டிலும், ஒரு கட்டாத கிணறும், களிமண் பயிப் உள்ள ஒரு கிணறும், அடிப்பாதையின் ஓர் பகுதியும் | வருணகுலசூரிய மகவாதுகே வரலியான பீறிஸ், வருணகுலசூரிய மகவாதுகே சோபியா பீறிஸ்வும், சைமன் சங்கிலிகே மாத்தா பேர்நாந்து, குறன, 3 ம் பகுதி | 0 3 8·56 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ௵ சித்திரை மாசம் 30 ந் தேதியிலன்று 11 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1931 ௵ பங்குனி௴ 24 ௳.

எச். பீ. கொவ்மன்.
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வத்தேகமத்தவில் பள்ளிக்கூடம் கட்டுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 9,016. குறிச்சி—வத்தேகமத்த.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | எந்தறுகொல்லகேனு .. | சேனை .. | நெகெற்றகெதற தன்மெனிக்காவும், நெகெற்றகெதற புஞ்சிமெனிக்காவும், நாயக்கும்புற-தம்பனை விகாரையின் குடிபதிகள் | 1 0 35·5 |
| 2 | ஷை .. | சேனை .. | ஷை .. .. | 0 0 29·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டுத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஆண்டு மே மாசம் 5 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு மாத்தளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1931 ம் ஆண்டு மாட்ச்மீ 18 ந் உ.

ஜீ. ஈ. ஜோன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாத்துறைப் பிரிவைச்சேர்ந்த வெல்லபட பத்துவிலுள்ள தளால்லை வடக்கில் பிரசித்த கிணறொன்றுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 14,285. குறிச்சி—தளால்லை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | றக்ககேதனிய .. | குளிக்கிறகிணறொன்றுள்ள தோட்டம், (செய்கைப் பண்ணவில்லை) | தளால்லை வாசிகளாகிய சோமஸ் தி சில்வா ஜயசிங்ங குணசேகரவும், அந்திரயஸ் தி சில்வா ஜயசிங்ங குணசேகரவும், சைமன் தி சில்வா ஜயசிங்ங குணசேகரவும், கொர்னேலிஸ் தி சில்வா கருணநாயக்கவும், ஜயசிங்ங ஆராச்சிகே பபசாமியும் | 0 0 3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஆண்டு சித்திரை மாசம் 21 ந் தேதியிலன்று காலமே 10 மணிக்கு மாத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1931 ம் ஆண்டு பங்குனிமீ 17 ந் உ.

எச். ஜே. எல். விக்லேயர்,
உப அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அவிசாவலை ஹினிகத்தன்னை றோட்டில் 50 ம் கட்டைக்குக் கிட்டடியிலுள்ள றோட்டைத் திருதத என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 4,096. குறிச்சி—இங்கிரியவத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கனேபல்ல தோட்டம் .. | தோட்டம் .. | ஜே. எஸ். ஸ்கொற்துரை, கனேபல்ல தோட்டம் .. | 0 1 8·5 |
| 3 | ஷை .. | ஷை .. | ஷை. .. | 0 0 28·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஆண்டு வைகாசி மாசம் 4 ந் தேதியிலன்று 10.30 மணிக்கு ஹித்தல்கலை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிஇதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1931 ம் ஆண்டு பங்குனிமீ 17 ந் உ.

டபிள்யு. ஓ. ஸ்றீவன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

ண்டு,

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் டெடுக்கலை மருந்து சாய்ப்புக்கு தண்ணீர் குளம் கட்ட என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 4,124. குறிச்சி—டெடுக்கலை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | எலபொடகேனே .. | தோட்டம் .. | ஏ. கே. டிங்கிரி மெணிக்காவும் மற்றவர்களும் .. | 0 | 0 | 1·77 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 0·38 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதிவவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதினுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின் படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஹு வைகாசி மாசம் 7 ந் தேதியிலன்று 10 மணிக்கு டெடுக்கலைறவுண வங்களாவில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1931 ம் ஹு பங்குனிமீ 20 ந் உ.

டபிள்யு. ஓ. ஸ்ரீவன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.